**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திருமதி.வெ.மோனிகா, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 14 ம் நாள் செவ்வாய்கிழமை

**இ.ம.எண்.5/2026 அதன் அ.வ.எண்.202/2025**

1. ராஜா விேனாபா
2. வசந்த ஸ்ரீ
3. பியூலா சுகன்யா ... மனுதாரர்கள்/ புரோபோஸ்ட் பார்ட்டிஸ் / 2, 3, 4 உத்தேச பிரதிவாதிகள்

–எதிர்–

1. வசந்த விஜயராணி ... எதிர்மனுதாரர் / வாதி

2. உதயகுமார் ... எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இம்மனு என்முன்பாக 07.07.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.கார்மேகன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.B.கமலநாதன் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.செல்வம் அவர்கள் ஆஜராகி எதிருரை தாக்கல் இல்லை என மேற்குறிப்பு செய்துள்ள நிலையில், இரு தரப்பு வாதம் மற்றும் ஆவணங்களை ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரர்களை இந்த வழக்கில் கட்சியாக சேர்த்து உத்தரவிடக் கோரி மனுதாரர்களால் கட்டளை 1 விதி 10(2)சி.பி.சின் பிரகாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. மனுவின் சுருக்கம்</u>**

2.1. வாதி / 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தபசில் சொத்தைப் பொருத்து விளம்புகை பரிகாரமும் மற்றும் அதனை அனுசரித்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். தபசில் சொத்தினை 2ம் எதிர்மனுதாரர் / பிரதிவாதி ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி திருநெல்வேலி, 4வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.12/2023 தாக்கல் செய்து, நீதிமன்றம் மூலம் பெற்ற கிரைய ஆவணம் எண்.1687/2025ஐ மனுதாரர்கள் கிரைய ஆவண எண்.7997/2025ன் மூலம் கிரையம் பெற்று தபசில் சொத்தினை அனுபவம் செய்து வந்ததாக கூறப்பட்டுள்ளது.

2.2. தபசில் சொத்தில் மனுதாரர்களுக்கு அனுபவமும், உரிமையும் உள்ளதால் வழக்கில் மனுதாரர்கள் அத்தியாவசிய நபர்கள் ஆவார்கள். மனுதாரர்களை கட்சியாக சேர்ப்பது நீதியின் பொருட்டு அவசியமாக இருக்கிறது. இந்த வழக்கில் மனுதாரர்களை கட்சி சேர்த்தால் தான் வழக்கின் உண்மையான தன்மை வெளிவரும். மேலும் நீதிமன்றத்தில் பல வழக்குகள் இதன் தொடர்ச்சியாக ஏற்படாமல் நீதிமன்றத்தின் கால நேரம் விரயமாவதை தவிர்க்க முடியும் என்ற காரணத்தினால் மனுதாரர்களை அசல் வழக்கில் கட்சியாக சேர்க்க வேண்டி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

**<u>3. 1ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரை சுருக்கம்</u>**

3.1. மனுதாரர்கள் தாக்கல் செய்திருக்கும் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாதியாக இருந்து பிரதான வழக்கை 16.07.2025ம் தேதி 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். மேற்கண்ட கால கட்டத்தில் தபசில் சொத்தைப் பொருத்து மோசடியான ஆவணத்தை வைத்திருந்தவர் 2ம் எதிர்மனுதாரர் ஆவார். 2ம் எதிர்மனுதாரர் மட்டும் தான் வழக்கை தாக்கல் செய்த காலத்தில் 1ம் எதிர்மனுதாரரின்

உரிமையை மறுத்து தபசில் சொத்தை 1ம் எதிர்மனுதாரர் அனுபவம் செய்வதை இடையூறு செய்ய முற்பட்டார். அதனால் 1ம் எதிர்மனுதாரர், 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்திருந்தார். மேற்படி வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது மனுதாரர்கள் 28.08.2025ம் தேதி தபசில் சொத்தை கிரையம் பெற்றிருப்பதாக அவர்கள் தாக்கல் செய்திருக்கும் மனுவின் மூலமாக 1ம் எதிர்மனுதாரருக்கு தெரிய வருகிறது.

3.2. மனுதாரர்களின் மனுவைப் பார்த்தாலே வழக்கு தாக்கல் செய்த பின்பு பிரதான வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது தான் 2ம் எதிர்மனுதாரர் 28.08.2025ம் தேதி மனுதாரர்களுக்கு கிரையம் கொடுத்திருப்பதாக தெரிய வருகிறது. அதனால் மனுதாரர்களின் மனுவின் படியே மனுதாரர்களின் கிரையம் வழக்கு நிலுவையில் இருக்கும் போது ஏற்பட்ட கிரையம் ஆகும். அதனால் மனுதாரர்களின் கிரையம் பிரிவு 52 ஆப் சொத்து உரிமை மாற்றுச் சட்டப்படி பாதிப்படையக் கூடியது. மனுதாரர்கள் நல்லெண்ண கிரையதாரர்கள் அல்ல. மனுதாரர்களுக்கு வழக்கு விபரம் தெரிந்து வேண்டுமென்றே 2ம் எதிர்மனுதாரரிடமிருந்து தபசில் சொத்தை கிரையம் பெற்றிருப்பதாக 1ம் எதிர்மனுதாரருக்கு தெரிய வருகிறது. அதனால் மனுதாரர்களை பிரதான வழக்கில் கட்சி சேர்க்க வேண்டிய அவசியம் அல்லை.

3.3. பிரதான வழக்கில் உள்ள பிரச்சனையானது 1ம் எதிர்மனுதாரருக்கும், 2ம் எதிர்மனுதாரருக்கும் இடையே ஏற்பட்டதாகும். 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் வழக்கிற்கு வழக்குமூலம் 2ம் எதிர்மனுதாரரை பொருத்து மட்டுமே ஏற்பட்டுள்ளது. மனுதாரர்களை பொருத்து ஏற்படவில்லை. அதனால் மனுதாரர்கள் இல்லாமல் 1ம் எதிர்மனுதாரருக்கும், 2ம் எதிர்மனுதாரருக்கும் உள்ள பிரச்சனையை சரியான முறையில் தீர்வு காண முடியும். மனுதாரர்கள்

பிரதான வழக்கிற்கு அவசியமான மற்றும் தேவையான தரப்பினர்கள் கிடையாது. எனவே, இம்மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை.

**5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.**

6. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. இரு தரப்பு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**தீர்வு**

7. இந்த மனுதாரர்கள் அசல் வழக்கிற்கு 3ம் தரப்பினர் ஆவார்கள். அசல் வழக்கானது எதிர்மனுதாரர் / வாதியால், எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கு எதிராக தபசில் சொத்தினைப் பொருத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், தபசில் சொத்தினைப் பொருத்து எதிர்மனுதாரர் / பிரதிவாதி ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி திருநெல்வேலி மாண்புமிகு 4வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அ.வ.எண்.12/2023-ல் வழங்கப்பட்ட தீர்ப்பாணையின் அடிப்படையில் கிரைய ஆவண எண்.1687/2025-ஐ நீதிமன்றம் மூலம் கடந்த 20.02.2025ம் தேதி மேலப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுள்ளதாகவும், அதன் அடிப்படையில் இந்த மனுதாரர்கள் 28.08.2025ம் தேதியிட்ட மேலப்பாளையம், சார்பதிவாளர் அலுவலக கிரைய ஆவண எண்.7997/2025-ன் அடிப்படையில் கிரையம் பெற்று அனுபவத்தில் இருந்து வருவதாகவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

8. இந்த மனுவோடு தாக்கல் செய்திருந்த மேற்கண்ட கிரைய பத்திர எண்.7997/2025–ஐ பரிசீலனை செய்த போது, இந்த மனுவின் மனுதாரர்கள் தபசில் சொத்தான முன்னீர்பள்ளம் கிராம புஞ்சை புல எண்.29/1A1A –ல் 38 சென்ட் இடத்தினை கிரையம் பெற்றுள்ளது தெரிய வருகிறது. இந்த அசல் வழக்கும் முன்னீர்பள்ளம் கிராம புல எண்.29/1A–ல் உள்ள 4.54 சென்ட் அளவுள்ள மனை எண்.122–க்கு உரிமை விளம்புகை வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

9. இந்த இடைநிலை மனுவில் குறியீடு செய்யப்பட்டுள்ள மனுதாரர்கள் கிரையம் பெற்ற பத்திரமான ம.சா.ஆ.1–ன் அடிப்படையில் அவர்கள் கிரையம் பெற்ற சொத்தின் விஸ்தீரனமானது 38 சென்ட் என்று கண்டுள்ள நிலையில், அசல் வழக்கு சொத்தானது 4.54 சென்டின் உரிமை விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், எதிர்மனுதாரர் / வாதி வழக்கறிஞர் தரப்பில் இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் சமயத்தில் இந்த மனுதாரர்கள் கிரையம் பெற்றுள்ளதால், அவர்கள் இந்த வழக்கில் தங்களை தரப்பினர்களாக கட்சி சேர்க்க உரிமை கோர முடியாது என்று வாதம் முன் வைக்கப்பட்டது. ம.சா.ஆ.1–ல் கண்டுள்ள சரத்துக்களின் வாயிலாக அந்த கிரையப் பத்திரத்திற்கு முன் பத்திரமான ஆவண எண்.1687/2025 என்பது மாண்புமிகு 4 வது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திருநெல்வேலியின் மூலம் அ.வ.எண்.12/2023–ல் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் எழுதிக் கொடுக்கப்பட்ட ஆவணம் என்பது தெரிய வருகிறது.

10. இந்த வழக்கானது எதிர்மனுதாரர் / வாதியால், கடந்த 2025 ம் வருடம் 6 வது மாதத்தில் தாக்கல் செய்துள்ள போது, அதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பே 2023 ம் ஆண்டு இந்த எதிர்மனுதாரர் / பிரதிவாதி தபசில் சொத்தினைப் பொருத்து ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ள

நிலையில், அதன் அடிப்படையில் பிறந்த உத்தரவின் வாயிலாக நீதிமன்றம் இயற்றிக் கொடுத்த கிரையப் பத்திரத்தின் அடிப்படையில் இந்த மனுதாரர்கள் கிரையம் பெற்றுள்ள போது, அவர்களை தரப்பினர்களாக கட்சி சேர்க்காமல் தபசில் சொத்தின் உரிமையினை முழுமையாக முடிவு செய்ய இயலாது. ஒருவேளை இந்த மனுதாரர்களை தரப்பினர்களாக கட்சி சேர்க்காமல் எதிர்மனுதாரர் / வாதி கோரியுள்ளது போல் வழக்குச் சொத்தின் மீதான உரிமை விளம்புகை செய்யப்பட்டால், அது முழுமையான தீர்வாக அமைந்திடாது. எனவே, தபசில் சொத்தின் உரிமை மீது எழுந்த பிரச்சனையை முழுமையாக தீர்வு காணும் பொருட்டு இந்த மனுதாரர்கள் அசல் வழக்கின் அவசிய தரப்பினராகவே தெரிய வருகிறது.

11. எனவே, வழக்குச் சொத்தின் உரிமையினை முழுமையாக நிர்ணயம் செய்ய வேண்டியும், அதன் மீதான பல்வேறு வழக்குகள் உருவாவதை தடுக்கும் பொருட்டும், இந்த வழக்கில் விசாரணை இன்னும் தொடங்காத நிலையில், இம்மனுவினை அனுமதிப்பதினால் எதிர்மனுதாரர்/ வாதிக்கு எந்தவித இழப்பும் ஏற்படபோவதில்லை என்பதாலும், தற்போது தபசில் சொத்தின் மீது மனுதாரர்கள் பெற்றிருக்கும் கிரையப் பத்திரத்தின் அடிப்படையில் மனுதாரர்களும் இந்த வழக்கின் விசாரணையில் பங்கு பெறுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்பதால், மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு, இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஜுலை மாதம் 14ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VENKATACHALAM MONIKA
Orders uploded on 14.07.2026
Digitally signed by VENKATACHALAM MONIKA
Date: 2026.07.14 18:38:07 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

**மனுதாரர் தரப்பு சாட்சிகள்** - இல்லை

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்**

ம.சா.ஆ.1 28.08.2025 தேதியிட்ட கிரைய ஆவணம் – நகல்

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்** - இல்லை

VENKATACHALAM MONIKA
Orders uploded on 14.07.2026
Digitally signed by VENKATACHALAM MONIKA
Date: 2026.07.14 18:38:29 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

முதன்மை மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

**<u>இ.ம.எண்.5/2026 அதன்</u>**

**<u>அ.வ.எண்.202/2025</u>**

சீரான / வரைவு உத்தரவு
14.07.2026.